2008 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு மாவட்ட விளையாட்டு மைதானம் ஏற்பட்டதற்குப் பின்னால்தான் உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் போன்றவை அமைக்கப்படுவது பற்றி பரிசீலிக்கப்படுவது வழக்கம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சென்னைக்குப் பக்கத்தில் இருக்கிற வேலூரிலே மைதானம் இதுவரை பெறப்படவில்லை என்பதை அவரே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே இந்த அவையிலே சொல்லி இருக்கிறேன். அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரமாக அந்த இடம் கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) கோட்டை மைதானம் பொதுக்கூட்டத்திற்குத் தேவைப்படுகிறது. (குறுக்கீடு) தனியார் கல்லூரியினுடைய இடத்தைப் பொறுத்தவரை, பல்கலைக்கழகம் மூலமாக அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள். உறுப்பினருடைய முயற்சியால் உரிய இடம் கிடைத்தவுடன் அதைப் பரிசீலித்து, பணி எடுத்துக்கொள்ளப்படும். உள்ளபடியே தமிழ்நாட்டிலேயே மாவட்ட அளவில் மைதானம் இல்லாதது வேலூர்தான் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *128*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

128—

கால்நடை மருந்தகம்

***38774—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு கால்நடை மருந்தகத்தை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு கால்நடை மருந்தகத்தை நவீனப்படுத்தும் பொருட்டு நபார்டு திட்டத்தின்கீழ் 47 வகையான நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, முழுக்க முழுக்க வேளாண்மைத் தொழிலை முதன்மையாகக் கொண்ட தொகுதியாகும். இங்கே வாழ்கின்ற விவசாயிகள் அதிகமான ஆடு, மாடுகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வசதியாக [illegible] ஆம் ஆண்டு மாண்புமிகு உள் துறை அமைச்சராக இருந்த திரு. கக்கன்ஜி அவர்கள்தான் அந்தக் கால்நடை மருந்தகத்தைத் திறந்து வைத்திருக்கின்றார்கள். அதற்குப் பின்னால், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த மருந்தகத்தைச் சீரமைத்து சுற்றுச் சுவர்களை எல்லாம் கட்டியிருக்கின்றார்கள். ஆனால், இன்றைக்கு அந்த மருந்தகம் ஒரு டாக்டர், ஒரு கால்நடை பராமரிப்பு உதவியாளர் கொண்ட மருந்தகமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த மருந்தகத்தின் சுற்றுச் சுவர் இடிந்திருக்கிறது. மின்சார வசதி இல்லை, மின் விளக்கு வசதியும் குறைவாக இருக்கிறது. ஜன்னல்கள், கதவுகள் ஆகியவை பழுதடைந்து இருக்கின்றன. குடியிருப்பு வசதிகள் கிடையாது. தண்ணீர் அடிபம்ப் வசதியும் கிடையாது. குடிதண்ணீர் வசதியும் குறைவாகத் இருக்கிறது. ஆகவே, அந்த மருந்தகத்தை விவசாயிகளினுடைய நலன் கருதி, பராமரித்து நவீனப்படுத்தித் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற மேற்படி மருந்தகத்தின் கட்டடத்தை நவீனப்படுத்தக் கூறுகின்றாரா அல்லது அதற்கு நவீன உபகரணங்கள் கேட்கிறாரா என்று தெரியவில்லை. கட்டடம் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அவற்றைப்

2008 ஏப்ரல் 21]

பராமரிக்க வேண்டும் என்று கூறினாலும், அதனை இந்த அரசு பரிசீலித்து, செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடமும் பழுதாகி இருக்கின்றது. அதேபோல, மழைக் காலங்களிலும், வெயில் காலங்களிலும் ஆடுகளுக்கும், மாடுகளுக்கும் வருகின்ற சப்பை நோய், அடைப்பான் நோய், நீலநாக்கு நோய், துள்ளும் மாரி நோய், ஆட்டம்மை நோய், கானை நோய் போன்ற தொற்று நோய்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோய் குறித்தெல்லாம் சொல்லிக்கொண்டிருக்காதீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை மாத்திரம் சொல்லுங்கள்.

திரு. ம. குணசேகரன்: கேள்வியை இனிமேல்தான் சார் கேட்க வேண்டும். நோய்களையெல்லாம் சொல்லிவிட்டுத்தானே கேள்வியைக் கேட்க வேண்டும்? நோய்களைப்பற்றிச் சொல்லாமல் எப்படிக் கேள்வி கேட்க முடியும்? நோயை சொல்லிவிட்டுத்தானே அதற்குத் தேவையானவற்றைக் கேட்க வேண்டும். அப்படிப்பட்ட நோய்கள் வருகின்ற நேரத்திலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற சில நேரங்களில் மருந்துகளும், மாத்திரைகளும், தேவையான மருத்துவ வசதிகளும், உபகரணங்களும் அதிகமாகத் தேவைப்படுகின்ற காரணத்தினால், விவசாயிகளினுடைய நிலைமைக் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற ஆடு, மாடுகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை அந்த மருந்தகத்தில் நவீனப்படுத்தித் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 47 வகையான சுமார் 75 எண்ணிக்கைக்குரிய நவீன உபகரணங்கள் (equipments) கடந்த 2 மாதங்களாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், மருந்துகள் தட்டுப்பாடு என்று கூறினார்கள். மருந்துகள் தட்டுப்பாடு என்ற நிலை தமிழகத்திலே எங்கும் இல்லை. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மானாமதுரை மருந்தகத்தில் அத்தகைய நிலை

இருக்குமேயானால் உடனடியாக, நாளையதினமே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 129. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

129—

சமுதாயக்கூடம்

***19210—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, இல்லியம்புதூர் மற்றும் பொத்தியம்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் சமுதாயக்கூடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி இல்லியம்புதூர் மற்றும் பொத்தியம்பாளையம் ஆதி திராவிடர் காலனிகளில் சமுதாயக்கூடங்கள் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி, இல்லியம்புதூரிலே, 100 வீடுகளும், அதன் அருகிலே உள்ள பெரிய இல்லியத்திலே 50 விடுகளும், கொல்லுக்காட்டு என்ற பகுதியிலே 50 வீடுகளும், ஆக, சுற்றிலும் மொத்தம் 200 வீடுகள் இருக்கின்றன. அப்பகுதிகளில் உள்ள அனைவரும், ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்த ஏழையெளியவர்கள். அவர்கள் திருமணம் செய்வது என்று சொன்னால், தனியார் திருமண மண்டபத்தில் செய்வது சிரமமான